உடுமலைப்பேட்டை நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை :– திரு. J.விநாயகம், B.Sc.,

ந.க.எண். 3125/2024/எப்1 நாள். 26.09.2025.

பொருள் :– மனைப்பிரிவு – உடுமலைப்பேட்டை நகராட்சி – சர்வே வார்டு.E – பிளாக் எண். 18 – நகரளவு எண். 12/1–ல் அமைந்துள்ள 3156.00 ச.மீட்டர் (0.78 ஏக்கர்) பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு – ஒப்புதல் வழங்குவது – தொடர்பாக.

பார்வை :– 1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க,எண். 52ZTVCGJ/2024/TCP, நாள்.26.11.2024.

2. மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட தான சாசனப் பத்திர எண். 13496 /2024, நாள். 06.12.2024.

3. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் /துணை இயக்குநர், திருப்பூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 52ZTVCGJ/2024/TCP, நாள்.17.12.2024.

4. தெருவிளக்குடன் கூடிய மின் கம்பத்திற்கு உரிய மதிப்பீட்டு தொகை ரூ.330000/–செலுத்திய ரசீது எண். 157/UMC/04/25–26/0008964, நாள். 11.03.2025,

5. வைப்புத் தொகை ரூ.1,00,000/– செலுத்திய ரசீது எண். 157/UMC/04/25–26/0004932, நாள்.29.07.2025.

6. நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டிபி–2, நாள். 20.10.2022.

7. அபிவிருத்திக் கட்டணம் ரூ.15800/– செலுத்திய ரசீது எண்.157/UMC/04/ 25–26/0004933, நாள்.29.07.2025.

8. மனைப்பிரிவு அனுமதி கட்டணம். ரூ.15000/– செலுத்திய ரசீது எண். 157/UMC/04/ 25–26/0004931, நாள்.29.07.2025.

9. நகர்மன்றத் தீர்மான எண். 1876 , நாள். 20.08.2025.

உத்தரவு :–

உடுமலைப்பேட்டை நகராட்சி சர்வே வார்டு.E, பிளாக் எண். 18, நகரளவு எண். 12/1–ல் அமைந்துள்ள 3156.00 ச.மீட்டர் (0.78 ஏக்கர்) பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, பார்வை 1–ல் கண்டுள்ள கடிதத்தின்படி சாலை அமைப்பு வரைபடத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளபடி, பார்வை 2–ல் கண்டுள்ள தானப்பத்திரம் மூலம் சாலை, மற்றும் பொது உபயோக இடங்கள் ஆகியவற்றினை நகராட்சிக்கு பதிவு செய்து ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு இணை இயக்குனர் /துணை இயக்குனர் திருப்பூர் அவர்களின் செயல்முறை ஆணையில் (SWP/DTCP/TIRUPPUR/ LAYOUT NO. 302/2024 என எண்ணிடப்பட்டு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவிற்கு பார்வை 9-ல் கண்டுள்ள நகர் மன்ற தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பார்வை 4, 5, 7, மற்றும் 8-ன்படி உரிய கட்டணங்கள் நகராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது, எனவே, நகர் ஊரமைப்புத் துறையால் வழங்கப்பட்ட நிபந்தனைகள், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பார்வை 6-ல் தெரிவித்துள்ளபடி தங்களால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி பணிகளுக்கு மட்டும், மொத்த மனைகளின் எண்ணிக்கையில் 60 விழுக்காடு அபிவிருத்தி அடையும் வரை அல்லது ஐந்து வருட காலத்திற்கு இவற்றில் எது அதிக காலமோ அது வரை தாங்களே பராமரிக்க வேண்டும் என்ற நிபந்தனைகளோடு குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

ஆணையாளர்

உடுமலைப்பேட்டை நகராட்சி

இணைப்பு :-

1. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்
2. நகர் ஊரமைப்புத் துறையால் வழங்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள்.

பெறுநர்

திரு. என். பொன்னுராஜ்,
த/பெ. நமச்சிவாயம்,
திரு. சி. முருகானந்தம்,
த/பெ. சிதம்பரசாமி,
க.எண். 54-55,
கிரீன்பார்க் லேஅவுட் 4-வது வீதி, 1-வது குறுக்கு சந்து,
உடுமலைப்பேட்டை.

நகல் :-

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் திருப்பூர் அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.
2. சார்பதிவாளர், உடுமலைப்பேட்டை.
   (பத்திரபதிவு செய்ய மட்டும் வழங்கப்படுகிறது).
3. நகராட்சி பொறியாளர், உடுமலைப்பேட்டை மேற்கண்ட மனைப்பிரிவில் உள்ள சாலைகளை, சாலைப் பதிவேடு மற்றும் UTIS மென் பொருளில் பதிவு செய்யும் பொருட்டு.
4. வருவாய் ஆய்வர், காலிமனை வரி நிர்ணயம் பணி மேற்கொள்ளும் பொருட்டு.
5. நகரமைப்பு ஆய்வாளர், உடுமலைப்பேட்டை நகராட்சி.